## 54 கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்ஂ

சோமசந்தரக்கடவுளால்சங்கப்புலவர்கள்கூட்டத்தில்சேர்க்கப்பட்டநக்கீரன்பொற்தாமரைகுளத்தில்தினமும்நீராடிசோமசுந்தரரைவழிபட்டு வந்தான். நக்கீரனுக்கு தமிழ்இலக்கணத்தை சரிவர யாரைக் கொண்டு போதிக்கலாம் என்று அம்மையுடன் ஐயன் கலந்தாலோசித்தார்.

அகத்தியர் மூலம் நக்கீரனுக்கு இலக்கணம் பயில்விக்கலாம் என்று உமாதேவி ஆலோசனைக் கூறினாள். அதன் படி ஒரே நேரத்தில் ஐயன் கீரனுக்கு இலக்கணம் பயிற்றுவிக்க எண்ணம் கொண்டு லோபாமுத்திரையுடன் அகத்தியர் மதுரைக்கு அனுப்பினார். மதுரை கோயில் வந்தடைந்த அகத்தியர் ஐயனை தரிசித்த பின்னர், தனக்கு முன்பு ஐயன் கற்பித்த இலக்கணத்தை கற்பித்து ஐயனின் ஆணையை நிறைவேற்றினார்.

அகத்தியர் சென்றபின், அகத்தியருக்கு கற்பித்தது போல் ஏன் நக்கீரனுக்கு ஐயனே இலக்கணம் கற்பிக்காத்தின் கரணத்தை ஐயனிடம் அம்மை வினவினாள். இறைவனை நாள் தோறும் வழபடுபவன், இறைவன் பணிக்கு பொருள் கொடுத்து உதவுபவன், சொன்ன சொல் மாறாதவன், பொறாமையில்லாதவன் ஆகியோருக்கு கற்றுத் தருபதே தருமமாகும். ஆனால் நக்கீரன் தன் பாடலில் பொருட் குற்றம் கண்டதால் நக்கீரனுக்கு அகத்தியரரைக் கொண்டு கற்பிக்கும் படி பணித்ததாக அன்னைக்கு பதில் அளித்தார். அகத்யரிடமிருந்து இலக்கணம் முழுவதும் கற்ற நக்கீரன் அதை மற்றவருக்கும் போதித்தான். பல காலம் இறைவனைப் பாடி இறைவனடி சேர்ந்தான் நக்கீரன்.

**பல்லவி**

தேவி நினைவு கூற அகத்தியரைக் கொண்டு
தமிழ் இலக்கணம் தனை கீரனுக்கு கற்பித்தீர்

**அனுபல்லவி**

தேவியும் உன்னை அகத்தியரைப் போல்
கீரனுக்கு கற்பிக்காதது ஏன் என்றாள்

**சரணம்**

தன் பாடலில் பொறாமை கொண்டு குற்றம் கண்ட நக்
கீரனுக்கு பாடம் சொல்ல மனம் இல்லை என்றீர்
தன்னிலை அறிந்த கீரன் மற்ற புலவர்களுக்கும்
பாடம் சொல்லி உன் திருவடியில் சிந்தை செலுத்தினான்